மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : கைக்குத்தல் அரிசி ஆலைகளை அதிகப்படுத்தவேண்டும் என்பதுதான் அரசின் நோக்கம். அதற்கேற்ற வாய்ப்புகள் வசதிகளைப் பொறுத்து அந்தக் காரியங்கள் நடைபெறு கின்றன. ஆலைகளை எல்லாம் மூடிவிட்டு கைக்குத்தல் அரிசியை ஏற்படுத்துகிற அளவிற்கு இன்னும் நாம் அந்த அளவிற்கு வளர்ச்சியைப் பெறவில்லை என்பதால்தான் ஆலைகள் இருந்துகொண்டிருக்கின்றன.

திரு. ஜி. ஆர். எட்மண்ட் பெர்னண்டோ : பாளையங்கோட்டையில் இயங்கிக்கொண்டிருந்த பெண்கள் கூட்டுறவு கைக்குத்தல் அரிசிச் சங்கம் நிறுத்தி வைக்கப்பட்டதற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அது பற்றிய விவரம் இல்லை.

திரு. கே. விநயகம் : கைக்குத்தல் அரிசி நல்ல சத்துள்ளது என்று எல்லோராலும் கருதப்படுகிறதே. அதை ஏதோ ஆஸ்பத்திரிகளிலும், சிறைச்சாலைகளிலும்தான் தருகிறார்கள் என்று சொன்னார்கள். அதை நாம் எல்லோரும் உண்ணுகிறோமா ? அப்படியிருந்தால் அமைச்சர்களில் எவ்வளவு பேர்கள் கைக்குத்தல் அரிசியை தினந்தோறும் உண்ணு கிறார்கள் என்று கேட்க விரும்புகிறேன். ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : முதலில் உறுப்பினர் அவர்கள் உண்ணுகிறார்களா என்பதை தெளிவுபடுத்திய பிறகு மற்றவர்கள் யார் யார் உண்ணுகிறார்கள் என்பது பற்றிய கணக்குகளை எடுத்துத் தரலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடி வுற்றன.

[**குறிப்பு.**—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக் குறி * இடப்பட்டிருந்தால் அவ் வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அவையுரிமைக் கேள்வி.

‘சிலம்பொலி’ வார இதழில் சட்டப்பேரவை குறித்து வந்துள்ள செய்தி

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து, திரு. ந. தரும லிங்கம் அவர்கள் ஒரு அவையுரிமைக் கேள்வியைக் கொண்டு வந்திருக் கிறார்கள். சென்னையிலிருந்து வெளியாகும் 1968-ம் ஆண்டு மார்ச் மாதம் 11-ம் தேதியிட்ட ‘சிலம்பொலி’ என்ற வார ஏட்டில் 4-ம் பக்கத்தில், “ இது என்ன சட்ட சபையா ? சந்தைக் கடையா ? சட்டசபை மெம்பர்கள் தூங்குகிறார்களா ?” என்று எழுதப்பட்டுள்ளது. இந்த சொற்றொடர்கள் தமிழ்நாடு சட்டப் பேரவையின் மானத்தையும், மரியாதையையும் பாதிக்கும் வகையில் இருப்பதால் இதைப் பற்றி விவாதிக்கவேண்டுமென்று கொண்டு வந்திருக்கிறார்கள். இதை நாளைக்கு எடுத்துக்கொள்கிறேன்.

Dr. H. V. HANDE : On a point of order. I wish to know what happened to the privilege motion given notice of by my hon. Friend S. Balasubramanian with regard to publication of certain speeches made by Mr. R. Krishnaswami Gounder.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதை பேரவைத் தலைவர் அவர்கள் பார்த்து தீர்ப்பளிப்பதாக இருக்கிறார்கள். பார்த்து, பின்னர் தீர்ப்பு அளிக்கப்படும்.